முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1263

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

15.03.2023, புதன்கிழமை

1. ஞான வேலிகொண்ட அரங்கனே
ஞானிகள் பலம்கொண்ட தேசிகனே
வானவர்கள் மெச்சுகின்ற அரங்கனே
வள்ளலாய் வாழுகின்ற தேசிகனே
2. தேசிகனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
தெரிவிப்பேன் ஞான அறிவுரை ஆசி
ஆசிதந்து உன் கரம்படவே
(சுபகிருது வருடம் பங்குனி மாதம் முதல் நாள், 15.03.2023, புதன்கிழமை)
ஆறுமுகன் யான் உலகோர்க்கு அருளுகின்றேன்
3. அருளுகின்ற இந்த வாய்ப்பை உலகோர்
ஆற்றலாக ஆன்மீக உண்மை வழிகளாக
மாற்றங்கருதி ஏற்றி உன் வழிவர
மக்களுக்கெல்லாம் ஞான சித்தி உறுதியாகும்
4. ஆகவே ஓங்காரக்குடில் என்பது
அகிலத்தையே மாற்றும் ஞானசபையாகும்
அகிலத்தார் வந்து சேர்ந்து உன்வழி
அவசியம் தீட்சை ஆசி பெற்றுவர
5. வருபவர்க்கெல்லாம் ஞானசித்தி
வருங்காலத்தில உலகையே மாற்றுகின்ற
மாற்றுகின்ற வல்லமையான சக்தியெல்லாம்
வரமாகக்கிட்டி அற்புதம் நிகழக்கூடும்
6. கூடவே அரங்கன் தர்மத்தை
குறையாக உலகோர் எண்ணிவிட
நாடெங்கிலும் கிளைகளாக இன்னும் பெருக்கியே
ஞானமாக உலகைமாற்றும் சக்தியாக தர்மத்தை தொடர
7. தொடரவே கலியுகத்தில் சடுதி மாற்றம்
குருஅரங்கன் மூலம் இனிதே நடந்தேறும்
இடரின்றி இந்த உலகமே பாதுகாப்பமைதிபெறும்
எல்லா மாந்தர்கட்கும் சன்மார்க்கம் மகத்துவமிக்க வேதமாக
8. ஆகவே மாறி அகிலத்தில் ஞான ஆட்சி
அரங்கன் ஆசிபட நடந்தேறும்
வரங்கள் கூட்டி அரங்கன் தரும் ஓங்காரக்குடில்
வையகத்தைக் காக்கும் மகா சக்திமிகு சபையாகும்

9. ஆகவே உலகோர் அனுகி ஒருமுறையேனும்
அரங்கன் தடம் வந்து சென்றால் போதும்
போதுமப்பா உலகோர்க்கு மாற்றம்
புண்ணியவழியாகக் கண்டு இனிதே

10. காலமெல்லாம் அவர்கள் அமைதி மகிழ்வு
கடைத்தேற்றத்துக்கு உண்டான வழி தேடி
ஞானவான்களாய் மாறுதல் பெறக்கூடும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—